ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1908/23 - 2015 මාර්තු මස 31 වැනි අඟහරුවාදා - 2015.03.31
*1908/23 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (xii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிய 1856/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1995, நவெம்பர் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கிழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அத்தகைய அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்" என்னும் விடயத்திற்கும் அதற்கான II ஆம் நிரலில் காணப்படும் அதனுடைய நேரொத்த பதவிற்கும் பதிலாகும் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையை திருத்துகின்றேன் :-*

| "*நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| *பீடம்* | *துறைகள்* |
| *சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்* | *1. சமூக கற்கைகள் துறை* |
| | *2. மானிடவியல் துறை* |
| | *3. தொல்பொருளியல் மற்றும் மரபுரிமைசார் முகாமைத்துவத் துறை* |
| | *4. சூழல் முகாமைத்துவத் துறை* |
| | *5. மொழிகள் துறை".* |

*கலாநிதி சரத் அமுனுகம,*
*உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2015, மாச்சு 30.*

*4 - 546*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*